திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஹரிஜன மாணவர்கள் எங்காவது சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்ற புகார் எழுதி அனுப்பினுல் கவனிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் கூறினுர்கள். ஒவ்வொரு கல்லூரியிலும் 300 மார்க்குக்கு மேல் வாங்கியவர்கள்தான் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று போர்டே வைத்திருக்கிறுர்கள். அரசாங்கக் கல்லூரிகளிலும் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இதனுல் ஹரிஜன மாணவர்கள் விண்ணப்பிக்காமலே இருந்து விடக் கூடிய நிலைமை இருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்களுடைய பதிலை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்க இவ்வளவு மார்க் எடுத்திருக்க வேண்டுமென்று நிர்ணயித்திருந்தால் அது தவறு என்று சொல்ல முடியுமா என்பதை ஆராய வேண்டும். இருக்கிற மாணவர்களிலே மார்க்கைப் பார்த்து சேர்த்துக் கொள்வது என்ற நிலையிலே தலையிட முடியாது என்பது இதுவரை அரசாங்கம் கொண்டிருக்கிற கருத்து. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அந்த அளவு மார்க் இல்லை என்ற காரணத்தால் சேர்த்துக் கொள்ள மறுக்கப்பட்டதாகத் தகவல் வந்தால் மேலும் கவனம் செலுத்தலாம்.

புலவர் கா. கோவிந்தன் : ஹரிஜன மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை எவ்வளவோ அந்த அளவுக்கு விண்ணப்பங்கள் வருகின்றனவா ? அல்லது அதற்குக் குறைவாக விண்ணப்பங்கள் வரக்கூடிய நிலைமைதான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும். எவ்வளவு ஸ்தானங்கள் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு மாணவர்கள் வந்து கொண்டுதான் இருக்கிறுர்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட சதவிகிதம் அளவுக்கு சேராத இடங்களில் அதை ஜெனரல் பூலில் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவு இருக்கிறது. அதிலே 25 சத விகிதத்தை பாக்வேர்டு கிளாஸ் மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிற்பட்ட சமூகத்தாருக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஒதுக்கப்பட்ட அளவுக்கு அவர்களும் சேர்ந்து கொண்டுதான் இருக்கிறுர்கள்.

* 429 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

அரசு நடத்தும் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு மாணவர்களை சேர்க்கும் குழுக்கள் (Committees) நியமிக்கப்பட்டனவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Selection Committees for Government Training Schools and for nine Government Arts Colleges in this State have been constituted during 1966–67

[5th November 1966

திரு. மீ. கலியாணசுந்தரம் : மாணவர்களைச் சேர்ப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற குழுக்களுக்கு அங்கத்தினர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? அரசியல் காரணங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா அல்லது திறமையான மாணவர்களைப் பொறுக்க வேண்டுமென்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசியலில் சம்பந்தப்படாதவர்கள் கூடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு யார் தகுதி என்று அரசாங்கம் கருதுகிறதோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. செ. மாதவன் : இந்தக் குழுக்களில் உத்தியோகப் பற்றற்றவர்களை நியமிக்கும்போது அந்தந்தப் பகுதியில் இருப்பவர்களை நியமிக்க வேண்டுமென்ற அடிப்படையில் நியமிக்கும்போது எதிர்க்கட்சியினர் இருக்கும் பகுதிகளில் வேறு பகுதியிலிருந்து இறக்குமதி செய்யக்கூடிய நிலை இருப்பது ஏன் என்று கூறுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தப் பகுதி, இந்தப் பகுதி என்று இல்லை. கூடியவரையில் அந்தந்த மாவட்டங்களில் உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

புலவர் கா. கோவிந்தன் : இவ்வாறு உத்தியோகப் பற்றற்றவர்கள் என்று நியமிக்கப்படுகிறவர்கள் அத்தனைபேரும் காங்கிரஸ்காரர்களாக இருக்கிறார்கள். உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்ற அடிப்படையில் உத்தியோகப் பற்றற்றவர்களை அமர்த்துவார்கள் என்றுதான் எதிர்க்கட்சியினர் கருதினார்கள். ஆகவே, அந்த மாதிரி ஓய்வு பெற்ற அதிகாரிகளை இந்தக் குழுக்களில் இடம் பெற வழி செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தனை பேரும் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்வது சரியல்ல.

திரு. மீ. கலியாணசுந்தரம் : காங்கிரஸ்காரர்களா இல்லையா என்பது பிரச்சினை அல்ல. காங்கிரஸ்காரர்கள் தயவை நம்பி இருப்பவர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் தயாராக இருந்தால் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். உத்தியோகப் பற்றற்றவர்களுக்குப் பதிலாக உத்தியோகத்திலுள்ள அதிகாரிகளைக் கொண்டே மாணவர்களைச் சேர்ப்பதாக இருந்தால் திறமையாக நடக்கும் என்ற நிலையில் அதற்கு அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு உத்தியோகஸ்தர்கள் தான் இதைக் கவனித்துக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு, உத்தியோகப் பற்றற்றவர்கள் இருப்பது நலம் என்று வற்புறுத்தப்பட்டது. அதற்குப் பிறகுதான் உத்தியோகப் பற்றற்றவர்கள் இதிலே சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

5th November 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் அந்தந்த நகரங்களில் அந்தந்த நகரங்களைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்கள் போடப்பட்டிருக்கிறார்கள். அந்த முறையில் சிலபல இடங்களில் எம்.எல்.ஏ.-க்கள் சேர்க்கப்படவில்லை. காங்கிரஸ் எம்.எல்.ஏ-க்கள் இருக்கின்ற இடங்களில் போட்டிருக்கிறார்கள். மாற்றுக் கட்சியினர் இருக்கக்கூடிய இடங்களில் போடப்படவில்லை. இந்த அடிப்படையில் அமைந்திருப்பதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் எல்லாம் எம்.எல்.ஏ.-க்கள் அல்ல. காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள் என்று சொல்வதும் சரியல்ல. மற்றவர்களும் இதிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். எம்.எல்.ஏ.-க்கள் அல்லாதவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

Central College of Karnataka Music

* 430 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the students who had taken Nagaswaram and Thavil courses at the Central College of Karnataka Music during the years 1961 to 1964 have performed poorly in their written tests ; and

(*b*) if so, whether the schemes for examinations will be modified suitably?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Yes.

திரு. வை. சங்கரன் : ஏற்கனவே இது சம்பந்தமாக பரீட்சைகளுக்கு இருந்த ஸ்கீம் என்ன? இப்போது எந்த முறையில் மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏற்கனவே கொஞ்சம் அதிகம் படித்திருக்கவேண்டும் என்று இருந்தது. அதிகமாகப் படித்திருக்கிறவர்களில் இதில் வரக்கூடியவர்கள் குறைவாக இருந்தது. ஆகவே இந்த விதி தளர்த்தப்பட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த கர்நாடக இசைத் துறையில் நாதஸ்வரம், தவில் போன்றவை நாம் போற்றி வளர்க்கவேண்டிய கலைகள். அவற்றில் படிக்கிற மாணவர்களுக்கு திறமைக்குறைவு ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை அரசு ஆராய்ந்ததா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சேருகிற மாணவர்களுக்கு கொஞ்சம் " பாக்கிரௌண்ட் " இருக்க வேண்டும். சென்னையில் அதிகம் இல்லை. பழனியில் நடக்கிறது. நன்றாக நடக்கிறது. ஆகவே, திருவையாற்றில் அரசாங்கம் நடத்துகிற கல்லூரியில்கூட இந்தப் பாடங்கள் இப்போது போதிக்கப்பட்டு வருகின்றன.